நிர்வாகத் திட்டத்தின் கீழ், அவர்களுக்கு இந்த உரிமை இருக்கிறது. என்றாலும் அவர்களும் அறநிலையத்துறையின் அனுமதிபெற்றுத்தான் இந்தக் காரியத்தைச் செய்ய முடியும். அப்படி அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அனுமதி பெறவில்லை. ஆகவேதான் தக்க கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறேன்.

முருகமங்கலம்-திருமங்கலம் சாலை.

* 795 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள முருகமங்கலத்தையும், திருமங்கலத்தையும் இணைக்கின்ற மண் சாலையை கப்பி சாலையாக மாற்றியமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: கேள்வியிற் குறிப்பிட்ட மண் சாலை கப்பிச் சாலையாக வெள்ளப் பாதிப்பு நிவாரணத் திட்டத்தின் கீழ் எடுத்து முடிக்கப்பட்டது.

மாயூரம்-மறையூர் சாலை.

* 796 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம்-மறையூர் சாலையினை செப்பனிட தற்போது மேற்கொள்ளப் பட்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: மாயூரம்-மறையூர் சாலைக்கு கப்பி போடும் வேலை ஏற்கனவே முடிக்கப்பட்டுவிட்டது.

Procurement of groundnuts

* 797 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether the Tamil Nadu Government have sought the permission of the Central Government to adopt the levy system to procurement groundnuts in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) ஆம்.